# செய்தி வெளியீடு

தகுதி வாய்ந்த ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களின் கனிவான கவனத்திற்கு.........

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆன் லைன் மூலம் விண்ணப்பங்கள் 05.07.2014 முதல் வரவேற்கப்படுகின்றன.

| திட்டம் | விண்ணப்பிக்க தகுதி |
|---|---|
| 1. மகளிர் நிலம் வாங்கும் திட்டம் – பெண்களுக்கானது<br>2. நிலம் மேம்படுத்துதல் – இரு பாலாருக்கும்<br>3. தொழில் முனைவோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்<br>அ) தொழில் முனைவோர் திட்டங்கள்<br>ஆ) பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல். | வ. எண்.1 , 2 மற்றும் 3 அ விற்கு – வயது வரம்பு 18 முதல் 55 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 இலட்சம் ஆகும். வாகனத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர் ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge மேலொப்பம் பெற்றிருக்க வேண்டும்.<br>வ. எண்.3 ஆ விற்கு – வயது வரம்பு 18 முதல் 55 வரை. பெட்ரோல், டீசல், எரிவாயு விற்பனை சில்லரை நிலையம் அமைப்பதற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3.00 இலட்சமாகும். |
| 4. அ) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்<br>ஆ) மருத்துவமனை, மருந்துக்கடை, கண் கண்ணாடியகம், முட நீக்க மையம், இரத்தப் பரிசோதனை நிலையம் அமைத்தல் (MBBS, BS, MS, BDS, BPT, D.Pharm / B.Pharm, Lab Technician / Para Medical Centre / படிப்பு முடித்தவர்களுக்கு | வயது வரம்பு 18 முதல் 35 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 இலட்சமாகும். வாகனத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர் ஓட்டுநர் உரிமம் மற்றும் Badge மேலொப்பம் பெற்றிருக்க வேண்டும்.<br>வ. எண்.4 ஆ –விற்கு மருத்துவமனை அமைக்கும் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3.00 இலட்சமாகும். இதற்கு அரசு அங்கீகார நிறுவனத்தில் உரிய பதிவு செய்திருக்க வேண்டும். |
| 5. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி<br>6. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன் உதவி | வயது வரம்பு 18 முதல் 60 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.1.00 இலட்சமாகும். |
| 7. மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி | இத்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள், விதவைகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்கள், நலிந்த கலைஞர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்திற்கு வயது வரம்பு இல்லை. |
| 8. இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி<br>9. தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 (TNPSC Group-1) முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி | 21 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு இத்திட்டத்திற்கு இல்லை. |
| 10. பட்டயக் கணக்கர் / செலவு கணக்கர்களுக்கு நிதி உதவி | வயது வரம்பு 25 முதல் 45 வயது வரை ஆகும். குடும்ப ஆண்டு வருமான உச்ச வரம்பு இத்திட்டத்திற்கு இல்லை. |

மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்புபவர்கள் **http://application.tahdco.com** என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும். பதிவு செய்யும் போது குடும்ப அட்டை / இருப்பிட சான்று, சாதிச் சான்று, வருமான சான்று, கல்வி தகுதி மற்றும் வயதிற்கான ஆதார சான்றிற்கு (பள்ளி மாற்றுச் சான்று / வாக்காளர் அட்டை / ஓட்டுநர் உரிமம் / பான் கார்டு / ஆதார் அட்டை / மதிப்பெண் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றையும் மற்றும் TIN நம்பர் உள்ள நிறுவனத்திடமிருந்து பெற்ற விலைப்புள்ளி, திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிட்டு திட்ட அறிக்கை மற்றும் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

நிலம் வாங்கும் திட்டத்திற்கு மூல பத்திரம், விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா அடங்கல், நில பத்திரம் மற்றும் நிலம் விற்பவரது சாதி சான்று விவரங்களை பதிவு செய்து ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக அனைத்து தாட்கோ, மாவட்ட மேலாளர் அலுவலகங்களிலும் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலாண்மை இயக்குநர்